# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 7
JULY 2019 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே!

உங்களுக்கு என் வாழ்த்துதல் 2019 ஜூன் ஜாமக்காரனை வாசித்து அதில் டிரைபல் மிஷன் வரலாருகளை எழுதி டிரைபல் மிஷன் பொது செயலாளர் Dr. முரளிதர் அவர்களின் தியாக முயற்சிகளை குறித்தும் **நான் டிரைபல் மிஷன்** துடங்கிய விவரங்களை குறித்தும் எழுதியது பலரை ஆச்சரியப்பட வைத்தது. மேலும் ஆனைக்கட்டியில் வேலைசெய்யும் ஆஸ்பத்திரி **டாக்டர்களுக்கும்** ஆஸ்பத்திரி **ஊழியர்களுக்கும்** சம்பளம் கொடுக்க ஒவ்வொரு மாதமும் தலைமை டாக்டரான Dr. முரளிதர், M.D., அவர்கள் படுகிற கஷ்டங்களையும், ஆதிவாசி பிள்ளைகள் படிக்கும் மெட்ரிகுலேசன் பள்ளி **ஆசிரியர்களுக்கும்** ஒவ்வொரு மாதமும் சம்பளம் கொடுக்க முடியாமல் படுகிற சிறமங்களை வாசித்து பலர் மன வேதனையடைந்தார்கள். அதற்காக ஜெபிப்பதாக கூறியவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

சிலர் எழுதும்போது பணம் நிறைந்த C.S.I. & லூத்தரன் சபையினர் நடத்தும் ஆஸ்பத்திரிகளையே நிர்வாக திறமையின்மையால் தமிழ்நாடு, **ஆம்பூர்** பெதஸ்தா ஆஸ்பத்திரி, **திருகோவிலூர்** லூத்தரன் ஆஸ்பத்திரி, **விருத்தாசலம்** ஆஸ்பத்திரி, தூத்துக்குடி C.S.I. நாகலாபுரம் ஆஸ்பத்திரி **சாயர்புரம்** C.S.I. ஆஸ்பத்திரி இப்படிப்பட்ட சிறப்பு பெயர்பெற்ற ஆஸ்பத்திரிகளை மூடவைத்துவிட்டார்கள். ஆஸ்பத்திரி பணியாளர்கள். **செவிலியர்களுக்கு** பல மாதங்கள் சம்பளம் கொடுக்காமல் அவர்களை வெளியேற்றிவிட்டனர். **நாசரேத்** லூக்ஆஸ்பத்திரி மிக சிறப்பாக இயங்கிகொண்டிருந்தது. அதுவும் இன்றோ நாளையோ என்று மரிக்கும் நிலையில் இருக்கிறது. எத்தனை ஏழை கிறிஸ்தவர்கள், புற மதஸ்தர் இந்த ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெற்று பயனடைந்தனர்.

ஆனால் லூத்தரன் - C.S.I. சபைகளுக்கும் திருமண்டலங்களுக்கும் பணமா இல்லை?. அவர்களுக்கு பணம் கொளுத்து கிடக்கிறது. வாரம் 1 லட்சம் சபைகளின் காணிக்கை வரவு உள்ள சபைகள் எத்தனை? அந்த பணத்தை இவர்கள் என்ன செய்கிறார்கள் ? நன்றாக உள்ள கட்டிடங்களையே இடித்து சுவரெல்லாம் மார்பிள் - டைல்ஸ் ஒட்டவைத்தும், சபை கோபுரங்களை பாபேல் கோபுரம்போல் மேலும் மேலும் உயர்த்தி கட்டி அழகு பார்க்கவும் இப்படிப்பட்ட வீண் செலவுகள்தான் செய்கிறார்கள். ஆனால் **வியாதியின், வலியுடன்** வரும் வியாதியஸ்தர்களுக்காக இயங்கும் இப்படிப்பட்ட **கிறிஸ்தவ** சபைகளின் **ஆஸ்பத்திரிகளை** தொடர்ந்து நடத்தவும் வியாதியஸ்தர் மருத்துவ உதவி பெறவும் இவர்கள் திட்டமிட்டால் எத்தனை மக்கள் சந்தோஷப்படுவார்கள். ஏன் இவர்களுக்கு இந்த **மனிதாபிமான** சிந்தனை வருவதில்லை என்று பலர் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். இதற்கு காரணம் இப்படிப்பட்ட மிஷன் சேரடபிள் ஆஸ்பத்திரிகள் லாபத்தின் அடிப்படையில் இயங்குவதில்லை என்பதுதான்.

2019 ஜுன் **ஜாமக்காரனில்** வந்த செய்திகள் வாசகர்களை சிந்திக்க வைத்ததற்காக தேவனை துதிக்கிறேன். வாசகர்களில் யாராவது சபைகளின் நிர்வாக கமிட்டியிலோ D.C. மெம்பர்களாகவோ உள்ளவர்கள மனது வைத்து ஆஸ்பத்திரிகளைப்பற்றி கமிட்டியில் உங்கள் குரல் இப்படி மூடப்படும் ஆஸ்பத்திரி போன்ற நல்ல காரியங்களுக்காக **டையோசிஸ் கூட்டங்களில்** ஒலிக்கட்டும். உங்கள் பதவி காலத்திலேயே இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக போராடி, **செத்துப்போன ஆஸ்பத்திரிகளை** சாகும் நிலையில் உள்ள **ஆஸ்பத்திரிகளை** உயிரடைய செய்யுங்கள். அதன் ஆசீர்வாதம் நிச்சயம் உங்கள் யாவருக்கும் கிடைக்கும்.

**என் ஊழிய செய்திகள்**

☐ கடந்த மாதம் நான் வட இந்திய ஊழியம் செய்து திரும்பினேன். இந்தியாவின் வடக்கு மூலையில் **ஜம்மு - காஷ்மீர்** பாகங்களில் உள்ள **உதம்பூர் - ராம் நகர்** போன்ற மலை பாகங்களில் கர்த்தர் என்னை மிகவும் ஆசீர்வாதமாக உபயோகித்தார். அந்த மிக நீண்ட தூர பயணத்தில் எனக்கு எந்த பலவீனமும், வியாதியும், வயிற்று உபத்திரவமும் உண்டாகாமல், என்னுடன் கூட பயனம் செய்தவர்களுக்கும் எந்த பலவீனங்களும் உண்டாகாமல், நீண்ட பயணத்தில் ரயிலிலும், அதன்பின் பயணம் செய்த ஜீப் போன்ற வாகனங்களிலும் எந்த சிறு கோளாரும் உண்டாகாமல் எங்களை காத்த தேவாதி தேவனுக்கு துதி உண்டாவதாக .

நான் சென்ற வட இந்திய பகுதிகளில் என் செய்திகளை மிக அருமையாக மொழிபெயர்த்த ஊழியர்களுக்கும, மிஷனரிக்காகவும் தேவனை துதிக்கிறேன்.

☐ மாதா மாதம் வெளியிடும் ஜாமக்காரன் ஊழியங்கள் தடைபடாமல் தொடர்ந்து நடத்த உங்கள் மனதை ஏவிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மனமாற நன்றி கூறுகிறேன்.

☐ என் வட இந்திய 3 நாட்கள் இரவும் பகலும் செய்த நீண்ட பிரயாணத்தில் **என் ஜாமக்காரன் வாசகர்களுக்கு** எதைப்பற்றியெல்லாம் எழுதவேண்டும் என்பதே என் சிந்தனையாயிருந்தது.

**நீதிமன்றத்தின் அருமையான கட்டளை**

☐ **உயர் நீதி மன்றம்** பள்ளி - கல்லூரி பிள்ளைகளின் **உடைகளை** பற்றி **கண்டிப்பான தீர்ப்பு** கூறியிருக்கிறது.

1) இஷ்டம்போல் தலை வாராமல் வரக்கூடாது. நவீன ஸ்டைல் என்று கூறி இஷ்டம்போல் (கிராப்) வெட்டக்கூடாது. **தலைமுடி** சீறாக இருக்கவேண்டும். **முள்ளம்பன்றி** போல் நவீன ஸ்டைல் என்று கூறி தலையில் பொதி (பாரம்) சுமப்பவர்கள் வைக்கும் சும்மாடு போல **தலைமுடியின்** மேல்பக்கம் மட்டும் உயர்த்தி, கீழ்பகுதி முழுவதும் முக சவரம் செய்ததைபோல் தலை அலங்கரித்து பிள்ளைகள் வரக்கூடாது. குருந்தாடியோ, சிறுந்தாடியுடனோ வரக்கூடாது. ஆண் பிள்ளைகளானாலும், பெண் பிள்ளை களானாலும் **ஜீன்ஸ் பேன்ட்** உபயோகித்து பள்ளி - கல்லூரிகளுக்கு வரக்கூடாது.

2) பெண் பிள்ளைகள் **உடலை ஒட்டிய மாதரி உடுத்தும் லெக்கின்ஸ்** உடையை அணிந்து பள்ளி - கல்லூரிக்கு கண்டிப்பாக வரக்கூடாது. **நீதிமன்றத்தின்** இந்த அருமையான (அறிவுரையல்ல) **கட்டளைக்காக** நீதிதுறையை **வாழ்த்துகிறேன்.**



இதுதான் ரெக்கின்ஸ்

நான் என் பிரசங்கத்தில் ஒவ்வொரு **ஊரிலும், மாநிலத்திலும்,** ஒவ்வொரு **சபையிலும்** இதைக்குறித்து பேசாமல் இருந்ததில்லை. இப்படி நான் **பேசியது** பல பிள்ளைகள் இஷ்டப்படவில்லை. தாய்மார்களும் இஷ்டப்படவில்லை. **பெற்ற தாயே உடலை ஒட்டிய லெக்கின்ஸ்** உடுத்தி மேலே அணியும் டாப்சை **இடுப்புவரை கிழித்துகொண்டு** துணி விலகுவதற்கு வசதியாக ஆபாசமாக உடுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் நீதிமன்றம் கட்டளையிட்டபின் வேறு வழியில்லாமல் கட்டளைக்கு கீழ்படிந்தார்கள் **சேலத்தில் உடையாப்பட்டி** உயர்ந்த **தனியார் பள்ளியில்** 45 மாணவர்கள் பள்ளிக்கு வெளியே நிறித்திவிட்டார்கள். மாணவர்கள் போராட்டம் நடத்த முயன்றார்கள். நிர்வாகம **நீதிமன்ற தீர்ப்பை** காட்டியபின் திரும்பிபோய்விட்டனர்.

அவ்வளவு பேரும் சலூனுக்கு படையெடுத்து ஆசைஆசையாய் அதிக பணம் கொடுத்து வெட்டிய **நவீன கிராப்பை** இஷ்டமில்லாமல் நீக்கி மிலிட்டரி கட்டிங்போல் முடிவெட்டிக்கொண்டு வந்தனர்.

**வேத வசனம்** இப்படி சொல்கிறது (வெளி 16:15) என்று நாம் சுட்டிக்காட்டி பிரசங்கிக்கும் போது அந்த ஆலோசனைகளை **அலட்சியப்படுத்தினர்.** வசனத்துக்கு கீழ்படியாத பெற்றோர் - மாணவர் **நீதிமன்ற சட்டத்தால்** கீழ்படியும் நிலை வந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

☐ நீங்கள் தொலைபேசியில் கூறிய **ஜெபகுறிப்பகளுக்கும்** கடிதத்தில், e-mailல் அனுப்பிய **ஜெபகுறிப்புகளுக்காகவும்** ஜெபிக்கிறேன். கர்த்தர் பலருக்கு அற்புதங்களை செய்துள்ளார். ஸ்தோத்திரம்.

☐ ஜூன் - ஜூலை மாதங்கள் **செலவுகள் நிறைந்த மாதம்** என்பார்கள். பிள்ளைகளின் பள்ளி - கல்லூரி கட்டணம் யூனிபார்ம், பஸ் போன்ற ஏராளமான செலவுகள் வாசகர்களின் குடும்பங்களுக்கு உண்டு என்பதை அறிவேன் என்றாலும் இந்த செலவினங்கள் மத்தியிலும் என் ஊழியங்களுக்காக தடையில்லாமல் காணிக்கை அனுப்ப **உங்கள் உள்ளங்களை ஏவின** தேவாதி தேவனை துதிக்கிறேன்.

☐ நீங்கள் NEFT, Online மூலமாக M.O., Cheque. DD மூலமாக அனுப்பிய காணிக்கைகள யாவும் கிடைத்தது. ஏற்கனவே நான் ஜாமக்காரனில் எழுதியதைபோல நீங்கள் காணிக்கை அனுப்பிய விவரத்தை SMS மூலமாக 9894261333 என்ற **மொபைல் நெம்பரில்** உங்கள் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு தொகையையும் உங்கள் பெயரையும் குறிப்பிட்டு SMS செய்தால் உங்களுக்கு எளிதாக இருக்கும். நானும் உங்கள் தொலைபேசியில் பணம் கிடைத்த விவரம் அறிவித்து ஜெபிக்கவும் முடியும்.

தேவ சமாதானம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

கர்த்தரின் பணியில்
**டாக்டர்.புஷ்பராஜ்**

# பிஷப் K.P. யோகன்னான்
## மனம் திரும்பவேண்டும்
## 10 வகுப்பிலிருந்து 1ம் வகுப்பிற்கு திரும்பினார்

**பிஷப் K.P. யோகன்னானின் யாத்திரை ஆத்மீக யாத்திரையாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது ஆத்மீகத்தை இழந்து நிற்கிறார். யாத்திரை முடங்கியது.**


Suvishesagan K.P.Yohannan


Bishop
Dr. K.P.Yohannan, Metropolitan

கேரளாவில் பிரசித்தி பெற்ற சுவிசேஷகர் **ஆத்மீக யாத்திரை** என்ற பெயரில் (அன்றைய காலத்தில் TV இல்லை) **வானொலியில்** தினசரி காலை நேரத்தில் சுவிசேஷகர் சகோ. **K.P. யோகன்னான்** அவர்களின் செய்தி கேரளா முழுவதிலும், தமிழ் நாட்டிலும் உள்ள அனேகரை சிந்திக்க வைத்தது. இவரின் எளிய **பிரசங்கம்**மூலம் **குடியை நிறுத்தியவர்க**ள் ஏராளம்.! **மனம் திரும்பியவர்கள்** ஏராளம் ! தன் எளிமையான மலையாள **கிராமத்து பாஷையில்** என் **குழந்தையே !** **தாயே! தகப்பனே! அம்மச்சி! சகோதரா! சகோதரி !** என்று வீட்டில் ஒரு தகப்பன் பிள்ளைகளை அழைப்பதுபோல தாத்தா தன் பேரன் பேத்திகளை அழைப்பது போல செல்லமாக தன் பிரசங்கத்தில் அழைத்து ஆலோனை கூறுவார். அதே சமயம் கோபமாகவும் பிரசங்கத்தில் ஏசுவார். **வானொலியிலேயே குடித்து குடும்பத்தில்** பிரச்சனை உண்டாக்குகிறவர்களை நேரிடையாக ஏசுவதுபோல் திட்டுவார். **டேய் குடிகாரா** உன்னால் உங்க அம்மா அழுகிறார்கள். பார்! நீ **திருந்தாவிட்டால்** கர்த்தர் உன்னை தன்டிப்பார் இப்படி உரிமையோடு பிரசங்கத்தில் பேசுவார். சில சமயம் **நாசமாக போகிறவனே** குடித்தே **உன் குடும்பத்தை அழிக்கப்போகிறாயா?** நீயும் அழிந்து உன் குடும்பத்தையும் ஏன் அனாதையாக்குகிறாய் ? இப்படியும் பேசுவார்.

**பொது கூட்டங்களில்** இவர்பேசும்போது **உபதேச** வித்தியாசம் இல்லாமல் எல்லாவித சபைகளிலிருந்தும் மக்கள் திறளாக இவர் பிரசங்கம் கேட்க வருவார்கள். இப்படி பொது கூட்டங்களிலும் **வானொலியிலும்** பிரசங்கம் செய்து ஆங்காங்கே **ஆயிரக்கணக்கில் சபைகளை** ஸ்தாபித்தார். **கேரளா, தமிழ்நாடு - வட இந்தியா** வரை 4000 சபைகளுக்குமேல் ஸ்தாபித்தார். தான் ஆரம்பித்த சபைகளுக்கு **பிலிவர்ஸ் சர்ச்** (விசுவாசிகளின் சபை) என்று பெயர் வைத்தார்.

இவர் உண்மையான ஊழியத்தை அறிந்து பல **வெளிநாட்டு ஸ்தாபனங்கள்** இவருக்கு **பணத்தை அள்ளி** கொடுத்தனர்.

**ஆத்மீக யாத்திரை** (பிலிசரஸ் சர்ச்) என்ற பெயரில் **வேதாகம கல்லூரிகளை** எல்லா **மாநிலத்திலும் மாவட்டத்திலும்** தொடங்கி **ஊழியர்களை உருவாக்கி** அதில் படித்து தேறியவர்களுக்கெல்லாம் **சபை நடத்த மாதா மாதம் பனம்** உதவி செய்தார்.

இன்று ஆலமரம் போல் **பிலிவர்ஸ் சர்ச்** ஸ்தாபனமாக வளர்ந்து பெருகுகிறது.

நிறைய பாஸ்டர்மார் இவரை ஏமாற்றி தான் ஒரு சபை நடத்துகிறேன் என்று பொய் சொல்லி சபையில் 40 குடும்பங்கள் கலந்து கொள்கிறார்கள் என்றும் எழுதி இந்த ஊழியர் யாருடைய வீட்டிலாவது **சபை பெயர் பலகையை** (போர்டு) மாட்டி அதன் பக்கத்தில் நின்று **புகைப்படம்** எடுத்து இதுதான் நான் நடத்தும் சபை என்று கூறி இவருக்கு தபாலில் அனுப்பினால் போதும் உடனே அந்த நபர் உண்மையான ஊழியக்காரனா? அங்கு சபை உண்மையில் நடக்கிறதா? என்பதையெல்லாம் விசாரிக்காமல், மனதார அந்த நபரை நம்பி, மாதா மாதம் பணம் அனுப்பி கொண்டேயிருப்பார். இப்படி ஏராளமான நபர்கள் இவரை ஏமாற்றினார்கள்.

இரண்டு நபர்கள் தமிழ்நாட்டில் ஒருவர் **தென்காசி** அருகிலும் மற்றவர் **மதுரை** அருகிலும் ஆட்களே இல்லாமல் **சபையும் நடத்தாமல்** சபைக்கு ஆத்துமாக்களை அந்த ஊழியர் தேடாமல் ஊர்சுற்றி கிறிஸ்தவ வீடுகளில் ஜெபித்து காணிக்கை வாங்கிக்கொண்டிருந்தாரகள். இதுபோல பல மாநிலங்களிலும் **Bro. K.P.** யோகன்னான் அவர்களை ஏமாற்றி பலர் பணம் பெற்றனர்.

இவைகளை நேரில் கவனித்த என்னால் இந்த ஊழியர்கள் இவரை ஏமாற்றுவதை தாங்கி கொள்ள முடியவில்லை. என் ஒழுங்குபடி அந்த குறிப்பிட்ட ஊழியர்களுக்கு அவர்கள் ஏமாற்றுதனத்தை நிறுத்தசொல்லி கடிதம் எழுதி எச்சரித்தேன். மேலும் நீங்கள் **K.P.** யோகன்னானுக்காக ஊழியம் செய்யாமல் **கர்த்தருக்கென்று** ஊழியம் செய்து பாருங்கள் . கர்த்தர் உங்களை ஊழியத்தில் உயர்த்துவார் என்றும் எழுதினேன். அவர்கள் திருந்துவதாக இல்லை.

உடனே அவர்களுக்கு நான் எழுதிய எச்சரிப்பு கடிதத்தை காப்பி எடுத்து அதை நான் சகோ. **K.P.** யோகன்னானுக்கு அனுப்பி என் ஆலோசனையையும் எழுதினேன். சீக்கிரம் நீங்கள் வெளி ஊர் ஊழியர்கனை கண்கானிக்க ஒரு உண்மையான நபரை தெரிந்தெடுத்து அந்தந்த மாநில சபைகளை நேரில் சந்திக்கசொல்லி அந்த ஊழியரை பற்றி ரிப்போர்ட் கொடுக்க சொல்லுங்கள் என்றேன். உடனே நடவடிக்கை எடுத்தார். ஒரே ஒரு நபர் கூட இல்லாமல் **சபைக்கு** 40 பேர் வருகிறார்கள் என்று **பொய் சொன்ன** முதல் நபரை உடனடியாக ஊழியத்திலிருந்து சகோ. **K.P.** யோகன்னான் நீக்கினார்.

அதன்பின் தமிழ்நாட்டிலிருந்து நல்ல ஊழியர்களை தெரிந்தெடுத்து தனது ஊழிய அலுவலகத்துக்கு மேலாளர் பதவியில் ஆக்கினார். அவரும் திறம்பட வெளி ஊர்களில் உள்ள சபைகளை நடத்தினார்.

**முதல் பின்மாற்றம்**

சகோ. **K.P.** யோகன்னான் அவர்களின் நல்ல ஜீவியம் , நல்ல ஊழியம். பண விஷயத்தில் அவர் உண்மையானவர் ஆகிய காரணத்தால் கர்த்தர் அவர் மூலமாக குறுகிய காலத்தில் சுமார் 6000 சபைகளை இந்தியாமுழுவதும் உருவாக்கினார்.

பல்வேறு வெளிநாட்டு மிஷனரிகள் K.P. யோகன்னான் நடத்தும் ஊழியத்தை இந்தியவிற்கு நேரில் வந்து கண்டுவிட்டு போனார்கள். அவ்வளவுதான் K.P. யோகன்னான் அவர்களுக்கு **பணம் கொட்டோ கொட்டென்று** கொட்டியது. **மிகப் பெரிய பணக்காரரானார்.**

ஆரம்ப காலங்களில் **எருமைகள். பசுமாடுகள்** நிறைந்த தொழுவத்தில் கட்டிலில் படுத்து வேதம் வாசித்த சகோ. **K.P.** யோகன்னான் அவர்கள் இன்று மிகப்பெரிய பங்காளாவில் தன் படுக்கையை மாற்றினார்.

சகோ. **K.P.** யோகன்னான் அவர்களின் மனைவி **ஜெர்மனி** தேசத்தை சேர்ந்த வெள்ளைக்கார பெண் அகும். அவரை காதலித்து கல்யாணம் செய்துகொண்டார். இப்போது மனைவி சார்பில் இன்னும் அதிகமாக பணம் குவிந்தது.

- ☐ இந்தியாவின் சிறந்த ஆங்கில பத்திரிகையான **Times** என்ற பத்திரிகை எடுத்த கணக்கெடுப்பில் **இந்தியாவிலேயே** வெளிநாட்டு பணம் அதிகம் **பெரும் நபர்கள்** இரண்டுபேர். 1) இந்து சன்னியாசியான **அமிர்தாபாய்** இவரின் சமூக. ஆன்மீக சேவையை பாராட்டி இந்திய அரசாங்கம் பல பெருமை அவருக்கு செய்து கௌரவித்தது. அதில் ஒன்று இவர் பெயரில் ஒரு **எக்ஸ்பிரஸ் ரயில்** விடப்பட்டது. அதன் பெயர் **அமிர்தா எக்ஸ்பிரஸ்** ஆகும். மதுரை **to** திருவனந்தபுரம் பழனி வழியாக அந்த ரயில் தினசரி விடப்படுகிறது.
- ☐ வெளிநாட்டு பணம் இந்தியாவிலேயே மிக அதிகம் பெரும் **இரண்டாவது நபர் Bro. K.P.** யோகன்னான் ஆகும். அவருக்கு வந்து குவியும் பணத்தை என்ன செய்யவேண்டும் என்பதில் திக்குமுக்காடினார்.

**அதன் பலன்..**

**Bro. K.P.** யோகன்னான்க்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும் மிகப் பெரிய **இடைவெளி** உண்டானது. **ஆத்மீக யாத்திரை** மாரிபோய் இவரின் ஊழியம் **உலக பிராகாரமான** சுற்றுலா **யாத்திரையாக** மாறியது. இவைகளை அறிந்த என் மனதில் மிகப்பெரிய துக்கம் உண்டாக்கினது. பலர் அழுதனர். இவர் பிரசங்கத்தால் மனம் திருந்தியவர்கள். **K.P.** யோகன்னானின் **பின் மாற்றம்** கண்டு கதறி அழுதனர்.

## *ஆரம்பகால பிரசங்கம்*

நான் முன்பே எழுதியதைப்போல் சகோ. **K.P.** யோகன்னான் அவர்கள் **அதிகாரத்தோடும்,** உரிமையோடும். **அன்போடும் மனபாரத்தோடும்** பிரசங்கித்தார். ரேடியோவில்

பிரசங்கிக்கும்போது அவர் வழமையாக பேசும் ஒழுங்கு **இது ஆத்மீக யாத்திரை** நிகழ்ச்சியில் பேசுவது **K.P.** யோகன்னான் ஆகும். இன்றைய **சிந்தா விஷயம்** என்று முகவுரையாக கூறி தன்பிரசங்கத்தை துடங்குவார். குறிப்பு எழுதி வைக்காமல் சரளமாக பிரசங்கிப்பார்.

அப்படியே மைதானத்தில் நடைபெறும் இவரின் ஆத்மீக யாத்திரை **பொதுகூட்டங்களில்** பேசும் போது **பாவத்ததை** கண்டித்து மனம் திரும்புதலைப்பற்றி தைரியமாக **Bold** ஆக பேசுவார்.

☐ ஒருமுறை நான் கேரள மாநிலத்தில் காரில் பயனித்துக்கொண்டிருக்கும்போது இரவு நேரம் சகோ. **K.P.** யோகன்னான் அவர்களின் பிரசங்கத்தை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு **தரையில் அமர்ந்து** மிகவும் சுவராஸ்யமாக பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தாரகள். நான் ஏற்கனவே சகோ. **K.P.** யோகன்னான் அவர்களின் விசிறியாகும். பல விஷயங்களில் எனக்கு முன் மாதிரி ஊழியராயிருந்தார். பிரசங்கிக்கும்போது யார் எவர் என்று முகதாட்சன்யம் பார்க்கமாட்டார். மிகவும் **Bold**ஆக பேசுவார். அப்படி பேசுவதால் அதன் பின் விளைவைப்பற்றி யோசிக்கமாட்டார். நானும் என் எழுத்துக்களில் ஜாமக்காரனில் **Bold** தைரியமாக எழுதுவதற்கு இவரும் என் ஊழியத்தின் முன்னோடியாகும். மேலே நான் எழுதியபடி அன்று இரவு நடைபெற்ற அந்த பொதுக்கூட்டத்தில் நானும் கூட்டத்தோடு கூட்டமாக மேடை அருகே யாரும் என் முகம் கானாதவாறு உட்கார்ந்துகொண்டேன். மேடையில் 3 **மார்தோமா** சபையின் **பிஷப்மாரகளும்** நூற்றுக்கணக்கான **ஆயர்கள்** ஊழியக்காரர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர். அன்று யோ. 3:3லிருந்து **மனம் திரும்புதலைப்பற்றி** பேசினார்.

ஒருவன் **மனம் திரும்பாவிட்டால்** பரலோக ராஜ்யம் போக முடியாது. நீங்கள் எந்த சபையானாலும் எந்த பதவி வகித்தாலும் மனம் திரும்புதல் அனுபவம் இல்லாமல் ஒருநாளும் பரலோகம் போக முடியாது என்று உரத்த சத்தமாக கூறி மேடையில் தலைமை தாங்கி அமர்ந்துள்ள 3 பிஷப்மார்களும், **மார்தோமா சபை** என்ற வித்தியாசமான சபையை சேர்ந்தவர்களாகும். அவர்களின் உடை **கோமாளி உடையைபோல்** இருக்கும். நீளமான வித்தியாசமான **கலர்கள் உள்ள அங்கியும்** பல **நட்சத்திரங்கள்** வரையப்ட்ட **தலைமுழுவதும் மூடப்பட்ட** நீல குல்லா (தொப்பி)யும் அணிந்திருப்பார்கள்.

சகோ K.P. யோகன்னான் மேடையில் உள்ள அவர்களை கை நீட்டி சுட்டிக்காட்டி நீங்கள் எல்லாரும் பிஷப்மார் என்றாலும் **நீங்கள் அணிந்திருக்கும்** இந்த வேஷம் போன்ற இந்த நீள **அங்கியும்** தலையில் அணிந்துள்ள **குல்லாவும்** உங்களை **பரலோகத்துக்கு அழைத்து செல்லாது.** நீங்கள் **மனம் திரும்பினால் ஒழிய** பரலோகம் போகவே முடியாது என்றார் பாருங்கள். எல்லாரும் அதிர்ந்து போனார்கள். நானும், பொதுமக்களும், ஆயர்களும் அதிர்ச்சியடைந்தோம். அத்தனை பொதுமக்களும் தெய்வத்துக்கு சமமாக நினைக்கும் அப்படிப்பட்ட **பிஷப்மாரை** அவமானப்படுத்தும் வகையில் இவர் இப்படி பேசியது நிச்சயம் அது **மேடை நாகரீகம்** அல்ல என்றாலும் அவரின் தைரியமாக பேசிய அந்த **மனம் திரும்புதலின் செய்தி** யாரும் எதிர்பாராத ஒன்றாகும்.

## பிஷப் பதவி ஆசை

ஒருவர் பிஷப் ஆக வேண்டுமானால் 5 அங்கீகாரம்பெற்ற பிஷப்மார்கள் இவர் தலையில் கை வைத்து Consigrat அபிஷேகம் செய்ய வேண்டும். ஆகவே அதற்கு அவர் மார்தோமா தலைமை பிஷப்பை அனுகினார். அவரோ எங்கள் மக்களை **முழுக்கல் ஞானஸ்நானம் கொடுத்து** உங்கள் சபைக்கு **பல குடும்பங்களை இழுத்துக்கொண்டீர்கள்.** அப்படியிருக்க நாங்கள் எப்படி இந்த விஷயத்தில் உதவ முடியும். மேலும் நீங்கள் **பெந்தேகோஸ்தே உபதேசம்** கை கொள்பவர். நாங்கள் எப்படி உங்களை **பிஷப்பாக்க** முடியும் என்ற கூறி மறுத்துவிட்டனர்.

## அன்றைய C.S.I மாடரேட்டர் அவர்கள் செய்த மஹா பெரிய தவறு

அந்த நாட்களில் C.S.I. சபைகளுக்கு **கிழக்கு கேரளா** C.S.I. சபைக்கு **பிஷப்பாக** பணியாற்றியவர்தான் 24 CSI சபைகளுக்கும் **மாடரேட்டராக** பதவி உயர்வுயர்வுபெற்றிருந்தார். அவர் பெயர் Most Rev. K.J. SAMUEL என்பவராகும். அவரும் சகோ. K.P. யோகன்னான் அவர்களும் பல காலம் **நெருங்கிய நண்பர்களாக** இருந்தனர். முடிவில் அந்த மாடரேட்டரை சந்தித்து தன்னை **அதிகாரபூர்வமாக பிஷப்** ஆக்க உதவ வேண்டும். வெளிநாட்டு உதவி ஸ்தாபனத்தார் என்னை பிஷப் ஆகும்படி என்னை அவசரப்படுத்துகின்றனர் என்றார்.

**பிஷப்மார் பதவியே** விலைக்கு விற்கப்படும் பதவி என்ற இழிநிலை் இருந்தது. ஆகவே பணம் கொடுத்தால் பிஷப்பை விலைக்கு வாங்கிவிடலாம் என்றார். மாடரேட்டர் சகோ. K.P. யோகன்னானிடம்தான் **கோடி கோடியாய்** பணம் கொட்டிக்கிறதே உடனே சம்மதித்தார்.

## விலைக்கு வாங்கப்பட்ட C.S.I. பிஷப்மார்



இப்போது **பெந்தேகோஸ்தே** சபைகளின் பாஸ்டர்களும் ஆந்திரா. தமிழ்நாடு, CSI சபையிலும் படிக்காமல் **டாக்டர்** பட்டம் **பிஷப்** பட்டமும் கொடுக்கும் கிறிஸ்தவ ஸ்தாபன கடைகள் உண்டு. அவர்களிடம் சென்று **பிஷப் பட்டம்** வாங்கிக்கொள்கிறார்கள். தமிழ்நாட்டிலும் ஒரு

பிஷப் டாக்டர் பட்டம் அப்படிதான் விலைக்கு வாங்கினார். ஆனால் W.C.C. (உலக சபைகளின் தலைமை)யின் அங்கீகாரம் பெற்றது CSI, லூத்தரன், மார்தோமா ஆகிய சபைகளாகும். அதனால் தான் சகோ. **K.P. யோகன்னான்** CSI மாடரேட்டர் மூலம் பிஷப் அங்கீகாரம் பெற முயன்றார். வெற்றியும் பெற்றார்.

## விலைக்கு விற்கப்பட்ட C.S.I. பிஷப்மாரகள்

CSI தெற்கு கேரளா (South Kerala) டையோசிஸ் பிஷப்பும் அதன்பின் மாடரேட்டருமாக இருந்த Rt. Rev. **கிளாக்ஸ்டன்** அவர்கள் (மாடரேட்டர் ஆகும்முன் நடந்த சம்பவம்) **12 கோடிக்கு** விலை பேசப்பட்டார்

2) Rt. Rev. தேவகடாச்சம் அவர்கள் CSI கன்னியாகுமரி டையோசிஸ் **பிஷப்பாக** இருந்தபோது அவருக்கு ஒரு கோடி ரூபாய்க்கு விலை பேசப்பட்டதாக செய்திகள். கேரளா மனோரமா செய்தி தாள்களில் வெளியாயின். இவர்கள் இரண்டு பேரையும் CSI மாடரேட்டர் Most Rev. K.J. சாமுவேல் அவர்கள் ஏற்பாடு செய்துவிட்டார்

மற்ற **இரண்டு பிஷப்மார்களை** சகோ. K.P. யோகன்னான் அவர்களே CNI (Church of North India), டையோசிஸ்களிலிருந்து **தலைக்கு 40 லட்சம்** கொடுத்து விலை பேசப்பட்டு யாவரும் கேரளாவில் உள்ள திருவல்லா வந்து சேர்ந்தார்கள்.

வெளி உலகத்துக்கு தெரியாமல் CSI & CNI டையோசிஸ் சபை விசுவாசிகள் அறியாமல் இரகசியமாக **பிஷப் அபிஷேக ஆராதனை** நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் பத்திரிகைகார்கள் எப்படியோ விவரத்தை மோப்பம் பிடித்து காமிரா - வீடியோவுடன் **அபிஷேக ஆராதனையில்** பங்குகொண்டார்கள். **மாடரேட்டரால்** விலைக்கு வாங்கப்பட்ட **4 பிஷப்மார்** யாவரும் கூடி தங்கள் **பிஷப் கோலோடு** தங்கள் **கைகளை வைத்து** ஒரு **பெந்தேகோஸ்தே பாஸ்டரான K.P. யோகன்னானை** பிஷப்பாக்கி பத்திரத்தில் 5 பிஷப்மார்களும் **கையெழுத்திட்டனர்.** இப்படியாக **சுவிசேஷகர் K.P. யோகன்னான் பிஷப்** K.P. யோகன்னாக மாறினார்.

## CSI மாடரேட்டர் CSIக்கு செய்த துரோகம்

இத்தனை பெரிய **துரோகத்தை** CSI சபைகளுக்கு விரோதமாக செய்த மாடரேட்டரையும் மற்ற பிஷபமார் விவரங்களையும் **ஜாமக்காரனில்** புகைப்படத்தோடு வெளியிட்டேன்.

CSI சட்டப்படி CSI அங்கத்தினன் ஒருவன் **முழுகி ஞானஸ்நானம்** எடுத்தாலே அவரை சபையை விட்டு நீக்க CSIயில் **சட்டம் இருக்கிறது.** ஆனால் **முழுகி ஞானஸ்நானம்** கொடுத்து CSI & மார்தோமா சபைகளிலிருந்து **சபை மக்களை பிரித்துக்கொண்டு** பொன ஒரு பெந்தேகோஸ்தே **பாஸ்டரை** CSI **பிஷப்மார் மாடரேட்டருடன்** சேர்ந்து எப்படி **பிஷப் அபிஷேகம்** நடத்தலாம்?.

இவர்கள் செய்த துரோகத்துக்கு இவர்களை **யார் சபையிலிருந்து வெளியேற்றுவது?** இந்த கேள்விகளோடு முழு விவரங்களையும் **ஜாமக்காரனில் வெளியிட்டேன்.** கேரளாவில்

என் ஜாமக்காரன் மலையாள பாஷையில் வாசித்த கிறிஸ்தவ சபைகள் பொங்கி எழுந்தன. வெளிநாட்டு CSI சபை மலையாளிகளும் கேள்வி கேட்க ஆரம்பித்தனர். மற்ற CSI டையோசிஸ் பிஷப்மார் மற்ற தினசரி பத்திரிகைகளுக்கு பேட்டியளித்து இந்த தவறு செய்த **மாடரேட்டர்** அவர்கள் **பதவியை ராஜினாமா** செய்யவேண்டும். இவர் CSI சபைகளுக்கு **பெரும் துரோகம்** இழைத்துவிட்டார் என்றார்கள்.

CSI பிஷப்மார்ளில் வடக்கு கேரள பிஷப் Rt. Rev. George Isaac அவர்கள தன் பிஷப் பதவியை **ராஜினாமா செய்கிறேன்.** மாடரேட்டர் தன் பதவியை **ராஜினாமா** செய்யவேண்டும் அல்லது **தன் செயலுக்கு பகிரங்கமாக மன்னிப்பு** கேட்க வேண்டும் என்றார்.



இந்த சமயம் கேரள CSI சபைகளுகக்குள் பெரும் கொந்தளிப்பு உண்டர்கியது. **வடஇந்திய** CNI **சினாட் மட்டும்** K.P. யோகான்னானை பிஷப் ஆக்க காரணமாக இருந்த **இரண்டு பிஷப் மார்களுடைய பிஷப் பட்டத்தை நீக்கிவிட்டு சாதாரண ஆயராக** அவர்கள் ஊழியம் செய்யும் தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால் நமது CSI மாடரேட்டரோ, பணம் பெற்ற பிஷப்மாரோ தங்கள் செயலுக்கு மனஸ்தாபமும் படவில்லை, மன்னிப்பும் கேட்கவில்லை. எதிர்ப்புகளை தங்கள் பதவி அதிகாரம்கொண்டு சமாளித்தனர்.

## பிஷப் K.P. யோகன்னானின் பின்மாற்றம்

பெரும்பாலும் ஒரு ஆயர் **பிஷப் பதவி** வகிக்கும்வரை **ஆன்மீகத்திலும்** ஜெப **ஜீவியத்திலும்** மிகவும் சாட்சியாக இருப்பார். ஆனால் பதவி கிடைத்ததும் கொஞ்ஜ கொஞ்ஜமாக **சுபாவம்** மாறும். அப்படித்தான் **பிஷப் K.P. யோகன்னான்** அவர்கள் பிஷப் பதவி கிடைத்ததும் **சுபாவம் மாறியது** போல் அவரின் **பெந்தேகோஸ்தே உபதேசமும்** மாறியது. அதற்கு **நேர் மாறான கத்தோலிக்க** உபதேசமாகிய **ஆர்தடாக்ஸ் உபதேசம்** என்று கேரளத்தில் அழைக்கப்படும் **உபதேசத்துக்கு மாறிவிட்டார்.** தன் பெயரையும் மாற்றிக்கொண்டார். பின் மாற்றம் அடைந்த கொரியா பிரபல பாஸ்டர் தன் பெயரை மாற்றிக்கொண்டதைப்போல இவரும் மாற்றம் செய்தார்.

இப்போது **பழைய ஏற்பாட்டின்** முறையில்தான் சபை **ஆராதனை** நடத்தப்படவேண்டும். **பழைய ஏற்பாட்டின்படி தூப கலசத்தில்** சாம்பிராணியிட்டு **புகையை சபை மக்களின் மேலும்** ஆல்டரை **பரிசுத்தஸ்தலம். பலிபீடம்** என்ற வார்த்தைகள் உபயோகித்து **ஆல்டர் முழுவதும் சாம்பிராணி புகை** இட வேண்டும். இது **சடங்கு அல்ல சாக்கிரமெண்ட்** இப்படிப்பட்ட **புகை**

**போடும் தூபம்** வழியாக **சபை மக்களின் ஜெபம்** பரலோகத்துக்கு அனுப்பப்படும் என்றார். இதற்குகென்று **ஒரு புத்தகம் எழுதி** தன் **சபைக்கு கொடுத்துள்ளார். ஆவிக்குரிய** ஜீவியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் இப்போது **கத்தோலிக்கர்களை** போல **சடங்குக்கு முக்கியத்துவம்** கொடுக்க வேண்டும் என்று தன் சபைகளுக்கு கட்டளையிட்டுள்ளார். நல்ல ஆவிக்குரிய சபையான பிலிவர்ஸ் சர்ச் மக்கள் இப்போது **சபையை விட்டு விலகி** மற்ற **பெந்தேகோஸ்தே** சபைகளுக்கு போய்விட்டனர். 4000 சபை கட்டிடங்கள் இருந்தது. ஆனால் அதில் விசுவாசிகள் இப்போது இல்லை. **பாஸ்டர்கள் சுமார் 12 பேர்** இவர் சபையை விட்டுவிலகி **என்னிடம் வந்து** எங்களை எந்த சபையிலாவது சேர்த்துவிடுங்கள் என்றனர். நான் அவர்களை எங்கு சேர்ப்பது ! நீங்களே அந்த ஏற்பாட்டை செய்துகொள்ளுங்கள் என்று சாப்பாட்டுக்கு பணம் கொடுத்து அனுப்பிவிட்டேன். இந்த நல்ல ஊழியர்கள் விசுவாசத்துக்காக சபையை விட்டு **சம்பளத்தை இழந்து** அலைந்து திரிகிறார்கள்! என்றாலும் **நான் அவர்களை பாராட்டுகிறேன்.** சம்பளத்துக்காக தவறான **உபதேசத்தை பின்பற்றாமல்** வைராக்கியத்தோடு **சபையை விட்டு வெளியேறினது பாராட்டத்தக்கது.** கர்த்தர் அவர்களை **கைவிடமாட்டார்.** ஆனால் பிஷப் K.P. யோகன்னானின் நிலைதான் மோசமானது. அவர் **ஆத்துமாவில் செத்தவராக** இப்போது **மிகப்பெரிய ஊழியம்** செய்கிறார். அது **கத்தோலிக்க உபதேச** ஊழியம்.

பவுல் கூறுவதை போல் **ஆவியில் ஆரம்பித்து மாம்சத்திலா முடிக்கிறீர்கள்?** என்று எச்சரித்ததுபோல **பிஷப் K.P. யோகன்னான்** அவர்கள் 10ம் **வகுப்பிலிருந்து ஒன்றாம் வகுப்பிற்கு மாறியிருக்கிறார்.** அவருக்காக அவர் சபைகளுக்காக ஜெபிப்போம். ☐

---

# ONLINE BANKING

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :** வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**<u>Overseas Doners):</u>**

**1). Bank Name : <u>State Bank of India -</u> Srirangapalayam Branch - SALEM -1970**
**A/c No. 10764116842, Swift code: SBININBB637**
இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **<u>(India Doners)</u>:**
**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: <u>CANARA BANK</u>, (Suramangalam Branch) - 1219**
வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**<u>Overseas Doners):</u>**
**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**
இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**<u>India Doners</u>:**
**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**
**MICR CODE: 636015005.**

# ஓசியா

## உடைந்த நிலைகளில் இருந்த உருமாற்றம்




- ராபின் சாம்

## வாழ்க்கையில் நாம் கவனமாய் இருக்கவேண்டிய 3 காரியங்கள்

மூன்று விதமானப் பாவங்களைத் தீர்க்கதரிசியான **ஓசியா** தன்னுடைய புத்தகத்தின் இரண்டாவது அதிகாரத்தில் குறிப்பிடுகிறதைப் பார்கின்றோம்.

அவைகள் முறையே

1. ஆவிக்குரிய வேசித்தனம் (idolatry)
2. நன்றி மறத்தல் (ingratitude)
3. மாய்மாலம் (hypocrisy)

## 1. ஆவிக்குரிய வேசித்தனம்

(வாசிக்க ஓசியா 2:2-5)

இஸ்ரவேலின் பாவங்களில் தேவன் முக்கியமானதாகவும் முதலாவதாகவும் கண்டது

**ஆவிக்குரிய வேசித்தனம்** ஆகும். தங்களுடைய **விக்கிரக ஆராதனையின்** நிமித்தமாக இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கண்களில் அருவருக்கப்பட்டவர்கள் ஆனார்கள்.

**விக்கிரக ஆராதனையினால்** ஆவிக்குரிய **வேசித்தனத்தைச்** செய்கிறவர்களாக இஸ்ரவேல் ஜனங்கள் இருந்தார்கள்.

மெய் தேவனே அவர்களை வழி நடத்திவந்தபோதும் அவர்கள் **கானானியர்களின் தேவனான பாகாலை** வணங்கினார்கள்.

தேசத்திலே **பஞ்சம்** வந்தபோது பாகாலிடம்தான் முறையிட்டார்கள். (1 இராஜ 18-19)

ஆனால் தேவன் சில நேரங்களில் **தேசத்தில் பஞ்சத்தை** அனுமதிப்பது தம்முடைய நியாயத்தீர்பை வெளிப்படுத்தவே (வாசிக்க 2 சாமு 21:1, இராஜா 16:33-34, 1 இராஜா 17:1, எரே.14:12 எசே. 5:12-13)

When God allows famine in our lives, our response should not be. :How do we get out of this?" but, What do I get out of this?"

தேவன் நம் வாழ்ககையில் **பஞ்சத்தை** அனுமதிக்கும்போது **இதிலிருந்து நான் எப்படி விடுபடுவது** என்று நினைப்பதைவிட **இதிலிருந்து நான் என்னக் கற்றுக்கொள்வது** என்பதாக இருக்கவேண்டும்.

**பஞ்சத்தின் அனுபவங்கள்** இஸ்ரவேலைப் பல நேரங்களில் **தேவனிடம் திரும்பச் செய்யவில்லை.** ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆமோஸ் 4:6)

இஸ்ரவேல் ஜனங்கள் உலகத்தின் வழியில் **பொய்யான தேவர்களைப்** பின்பற்றிச் சென்றார்கள்.

வேதத்தில் கர்த்தர் தம் ஜனங்கள் உலகத்தோடுள்ள உறவில் எப்படி இருக்கவேண்டும் என்று எழுதி வைத்திருக்கின்றார்.

**செய்யாதிரு** என்ற 4 கட்டளைகள் நமக்கு உலகத்தோடுள்ள உறவில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. அவர்களோடு அன்புகூராதிரு (1 யோவ. 2:15-17)
2. அவர்களுக்கு சிநேகிதனாயிருக்க விரும்பாதே (யாக்கோபு 4:4)
3. அவர்களிடம் கறைபடாதிரு (யாக்கோபு 1:27)
4. உலகத்தின் வேஷந்திரியாதிரு (ரோம. 12:2)

## 2 நன்றி மறத்தல்

(வாசிக்க 5 முதல் 9 வரையுள்ள வசனங்கள்)

இது இஸ்ரவேலின் **இரண்டாவது பாவம்**

அப்பத்தையும், தண்ணீரையும், ஆட்டு மயிரையும், பஞ்சையும் எண்ணையையும். பானங்களையும் கொடுத்தார்கள். **கர்த்தராகிய ஆண்டவர்** யார் என்பதை இஸ்ரவேல் மறந்துபோனது.

தேவன் இஸ்ரவேலுக்கு **அப்பத்தையும். தண்ணீரையும்** தந்ததுமில்லாமல் அவைகளை **ஆசீர்வதிக்கவும் செய்தார்.** (யாத் 23:25) தருவேன் என்று சொன்னதையும் மிஞ்சி **ஆசீர்வதித்தார்** (உபா. 7:12-13)

எல்லா ஜனங்கள் விடவும் **இஸ்ரவேலை உலகத்தில் உயர்த்தினார்.** (உபா. 7:14)

நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் எப்போது முழுமையடையும் என்று நீங்கள் எப்போதாவது யோசித்துப் பார்த்ததுண்டா?

திருப்தி என்ற நிலைமை வரும்போது நம்முடைய ஆசீர்வாதங்கள் முழுமையடையும். கர்த்தர் அந்த நிலைமைக்கு இஸ்ரவேலைக் கொண்டுவந்தார். (உபா. 11:14-15)

இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து தேவன் திருப்தி என்ற நிலைமை வருமபோது **என்ன செய்யவேண்டும்** என்று சொன்னார். (உபா. 8:10)

அப்படியே **திருப்தி வரும்போது** என்ன **செய்யக்கூடாது** என்றும் சொன்னார். (உபா. 8:16-19)

ஆனால் **எதைச்செய்யக்கூடாது** என்று தேவன் அவர்களுக்கு சொல்லியிருந்தாரோ **அதையே அவர்கள் செய்தார்கள்.**

உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்படியாமற்போவதினால் கர்த்தர் உங்களுக்கு முன்பாக **அழித்த ஜாதிகளைப்போல** நீங்களும் அழிவீர்கள, என்று (உபா 8:20) சொல்லியிருந்தார். ஆனால் தமது மிகுந்த கிருபையால் அவர் அவர்களை **அழிக்கவில்லை.** வெருமனே தண்டித்தார் அவ்வளவுதான்.

அவர் வாசல்களில் துதியோடும். அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள் என்று சங்கீதம் 100:4 சொல்கிறது.

தேவனை **ஸ்தோத்தரியாமலும்** துதிக்காமலும் இருப்பது **நன்றி மறப்பது** என்ற வேதம் சொல்கிறது.

தேவனை **துதிக்காமலும்** ஸ்தோத்தரியாமலும் இருப்பது அவ்வளவு பெரிய குற்றமா? என்று நினைப்பவர்கள் ரோமர் 1:21 வாசிக்கவும்.

தேவன் நம் வாழ்கையில் பஞ்சத்தை அனுமதிக்கும்போது இதிலிருந்து நான் எப்படி விடுபடுவது என்று நினைப்பதைவிட இதிலிருந்து நான் **என்னக் கற்றக்கொள்வது** என்பதாக இருக்கவேண்டும்.

அவர்கள் தேவனை அறிந்தும். **அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலுமிருந்து** தங்கள் **சிந்தனைகளினாலே வீணரானார்கள்,** உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்து.

தேவனுக்கு **எதிர்த்து நிற்பவர்கள்** வந்து நிற்கும் முதல் படி தான் **நன்றி மறத்தல்** என்ற நிலைமை.

## 3. மாய்மாலம்

(வாசிக்க 10 முதல் 13 வரையுள்ள வசனங்கள்)

இஸ்ரவேலின் நிலைமையப் பாருங்கள் தேவனாகிய **கர்த்தர் ஏற்படுத்தினப் பண்டிகைகளை ஆசரித்தார்கள்.** ஆனால் தங்கள் **பலிகளையும் துதியையும் பாகலுக்குச்** செலுத்தினார்கள்.

வானங்களே கேளுங்கள். பூமியே செவிகொடு. கர்த்தர் பேசுகிறார். **நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்.** அவர்களோ **எனக்கு விரோதமாய்க்** கலகம்பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும், **இஸ்ரவேலோ அறிவில்லாமலும்,** என் ஜனம் **உணர்வில்லாமலும்** இருக்கிறது என்கிறார். ஐயோ பாவமுள்ள ஜாதியும். அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும். பொல்லாதவர்களின் சந்ததியும். **கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள்.** கர்த்தரை விட்டு இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி பின்வாங்கிப்போனார்கள்? (ஏசாயா 1:2-4)

இதை **நாமும் செய்கிறோம்.** ஆலயத்தில் **ஆராதனையில் நம் சரீரங்கள்** மட்டும் **துதிக்கும்,** ஆனால் நம்முடைய **ஆவியோ அலைபாய்ந்துகொண்டிருக்கும்.**

**நாவு** துதிக்கும், ஆனால **மனது** சொல்லும்.
உன் **கடன் பிரச்சனைத்** தீராது
உன் **பிள்ளையின் கருவை** கர்த்தர் திறக்கமாட்டார்.
என் **சரீர வியாதி** மாறவே மாறாது.
உன் **கணவன் ரட்சிக்கப்படமாட்டார்.**
இப்படிப்பட்டவர்களுக்கு இயேசு வைத்தப் பெயர் தான் **மாயக்காரர்** (மாய்மாலக்காரர்)

**மாயக்காரரே.** உங்களைக்குறித்து இந்த ஜனங்கள் **தங்கள் வாயினால்** என்னிடத்தில் சேர்த்து **தங்கள் உதடுகளினால்** என்னைக் **கனம்பண்ணகிறார்கள்.** அவர்கள் **இருதயமோ எனக்குத் துரமாய் விலகியிருக்கிறது.** மனுஷருடைய **கற்பனைகளை உபதேசங்களாப்** போதித்து வீணாய் **எனக்கு ஆராதனை செய்கிறார்கள்** என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார் (மத் 15:7-9)

தேவன் நமக்குச் செய்யக்கூடிய கொடுமைகளில் **பெரிய கொடுமை எது தெரியுமா?** நம் **இஷ்டப்படி நம்மை வீட்டுவிடுவதுதான்.** இது மிகவும் ஆபத்தானது ஆகும்.

கர்த்தர் நம்மை நம் இஷ்டப்படி வாழ **நம் வழிகளுக்கு** விட்டு விடாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

## பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் **பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே** தேவனுடைய சித்தமா யிருக்கிறது. அந்தப்படி நீங்கள் **வேசிமார்க்கத்துக்கு** விலகியிருந்து தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல **மோக இச்சைக்குட்படாமல்** உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தாமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி... (1 தெச. 4:2-5)

## எல்லாவற்றிலும் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும்.

மேல் வீட்டறையில் **எந்தப் பாத்திரத்தை** எடுத்து இயேசு ஸ்தோத்திரம் பண்ணினார்?

இன்னும் கொஞ்ச நேரத்தில் **இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும் என்று ஜெபிக்கப் போகிறாரோ.!** அந்தப் **பாத்திரத்திற்காகவே** இயேசு ஸ்தோத்திரம் பண்ணியார் (மாற்கு 14:23, 36)

உன் வாழ்க்கையில் நடக்கும் **நன்மைக்கு** மட்டுமல்ல. **தீமைக்கும் வேதனைக்கும், நிந்தைக்கும்** கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணு.

தீமைக்கு ஸ்தோத்திரம் பண்ணுகிறவன் **நன்மைக்கு ஸ்தோத்திரம்** பண்ணாமல் இருக்க முடியாது.

## வாழ்க்கையில் மாய்மாலமில்லாமல் வாழ வைப்பார்

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதி. 4:23)

"உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லதென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் (மத் 5:37)

# ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியில் நடந்த அற்புதமும்



**Dr. முரளிதர்,** M.D.



**Dr. ஏலியம்மா**

2019 **ஜூன் மாத ஜாமக்காரனில்** டிரைபல் மிஷன் தோன்றிய வரலாறும் - ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி தோன்றிய வரலாறும் இப்போது அந்த பெரிய ஆஸ்பத்திரி தொடர்ந்து நடத்த முடியாமல் தடுமாறும் நிலையைக்குறித்த விவரங்களையும் எழுதினேன்.

யானைகள் நிறைந்த அந்தமலை பிரதேசத்தில் பிரசவ சமயத்தில் உயிரை காப்பாற்ற இராத்திரி முழுவதும் உறங்காமல் **Dr. முரளி** அவர்களும் Dr. **ஏலியம்மா** அவர் களுடன் செவிலியர் களும் பணம் எதிர் பாராமல். ஒரு பெண்ணையும், குழந்தை யையும் உயிர் பிழைக்க வைக்க எப்படியெல்லாம் பாடுகள்பட்டு பிழைக்க வைத்தார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சில வருடங்களுக்கு முன் நடந்த சம்பவத்தை Dr. முரளிதர்M.D. அவர்களே அறிவிப்பதை வாசித்து பாருங்கள்.

இந்த ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் கர்த்தர் அந்த **ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி** மூலம் நடத்தும் அற்புதம் ஏராளம். டாக்டர்களும் செவிலியர்களும் இணைந்து ஜெபித்து நடந்த அற்தமும் ஏராளம்.

இப்படிப்பட்ட மலை காட்டில் அமைந்துள்ள மிகமிக தேவையுள்ள இந்த ஆஸ்பத்திரி அந்த அட்டபாடியிலும் ஆனைக்கட்டியிலும் ஆதிவாசிகளுக்கு மிக அவசியம் என்பதையும்

அது மூடப்படக்கூடாது என்பதையும் உணர்த்தவே **உண்மையாக நடந்த அற்புத அனுபவத்தை** இங்கே குறிப்பிடுகிறேன். வாசகர்கள் தொடர்ந்து ஜெபியுங்கள்.

## Dr. முரளிதர், M.D., M.N.M.S., அவர்கள்கூறுவதை கவணியுங்கள்

நள்ளிரவில் ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியில் நடந்த அற்புதம்

குவா குவா என்று பிறந்த குழந்தையின் ஆழுகுரல் எங்களது ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியின் பிரசவ அறையிலிருந்து எழும்பி. ஆனந்த அலைகளை வெளியே காத்துக்கொண்டிருந்த உறவினரிடையே பரப்பியது. பிரசவித்த தாய் தன் களைப்பு நீங்கி இளைப்பாறத் தொடங்கினாள். (Gaynaedologist) மகப்பேறு மருத்துவ நிபுணரான **டாக்டர் ஏலியம்மா** அவர்கள் பிரசவம் நல்லபடியாக முடிந்து. **பிறந்த குழந்தை** ஆரோக்கியமாக இருந்ததால் நிம்மதியடைந்தார்கள். அவர்கள் தனக்கு அருகில் நின்றுகொண்டிருந்த தனக்கு உதவிய செலிவியரிடம் **அப்கார்** 10/10 என்று குறிப்பிட்டார்கள். இது பிறந்த குழந்தை முழுமையாக சுகமுள்ள ஒரு குழந்தை என்பதை மருத்துவர்கள் குறிப்பிடும் (உபயோகிக்கும்) பதமாகும். தற்செலாக அங்கு வந்த டாக்டர் முரளியாகிய நான் உள்ளே எட்டிப்பார்த்து சுகப்பிரசவம் நடந்ததைக் கண்டு, வெளியே கவலையோடு நின்றுக்கொண்டிருந்த குழந்தையின் தகப்பனாரிடம் நற்செய்தியை சொல்லி அவரை வாழ்த்திவிட்டு உறங்கச்சென்றேன்.

குழந்தையை வெளியே தூக்கிவந்து நின்றுக்கொண்டிருந்த உறவினருக்கு காட்டப்பட்டது. பிறந்த குழந்தையின் வரவால் மகிழ்ச்சியடைந்த தகப்பனார் நள்ளிரவை தாண்டிவிட்டபடியால் தனது தாயாரை தனது மனைவிக்கும் குழந்தைக்கும் உதவியாக நிறுத்திவிட்டு 25 கி.மீட்டர் தொலைவிலிருக்கும் தனது வீட்டிற்குப் அந்த இருட்டில் தைரியமாக புறப்பட்டார்.

நானும் வீட்டிற்குச் சென்று நடந்த **சுகப்பிரசவத்திற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தினேன்.** ஒவ்வொரு **பிரசவத்தின்** போதும் கடைசிக்கட்டத்திலும் **பிரச்சனைகள் வரக்கூடும்** என்று மருத்துவர்களாகிய எங்களுக்கு மட்டுமே தெரியும் பிரசவிக்கும் தாயினுடைய **பிரசவ வேதனையைப்** போன்றே **மகப்பேறு மருத்துவ நிபுணரக்கும்** வியாதியஸ்தரை குறித்து **மனக் கவலை உண்டு** என்பதை ஒரு சிலரே அறிவர்.

நள்ளிரவு 12:15 மணி



நான் வீட்டில் துாங்க ஆரம்பித்த நேரம் டெலிபோன் அடிக்கும் சத்தம் கேட்டது. சார்! நீங்கள் **பிரசவ அறைக்கு** உடனடியாக வாருங்கள் . இது ஒரு **அவசர அழைப்பு** என்று ஆஸ்பத்திரியில் இருந்து நர்சின் **பதட்டகுரல்** மறுமுனையில் ஒலித்தது. நான் **பிரசவ அறைக்கு** விரைந்து சென்று பார்த்தேன். அங்கு **பிரசவித்த தாய்** இரத்தப்போக்கோடு இருப்பதையும் என் மனைவி Dr. **எலியம்மா** வேர்த்து விறுவிறுத்து கொண்டிருப்பதையும் கண்டேன்.

கர்ப்பப்பை **தலைகீழாக** வெளியே வந்துவிட்டது (Inversion of Uterus) என்று என் மனைவி மெல்லியக்குரலில் என்னிடம் கூறி. அதை என்னால் உள்ளே தள்ள முடியவில்லை என்றும் இந்த **இரத்த போக்கு நிற்க வேண்டுமானால்** இதை உள்ளே தள்ள வேண்டும் அல்லது உடனடியாக **அறுவை சிகிச்சை** செய்து **கர்ப்பப்பபையை எடுத்து விடவேண்டும்** என்றும் தொடர்ந்து கூறினார்கள்.

கர்ப்பப்பை தலைகீழாக வெளியே வருவது என்பது (Inversion of Uterus) பிறந்த குழந்தையின் **தொப்புள்கொடி** வெளியே வரும் பொழுது **கர்ப்பப்பையும்** இணைந்து வெளியே வரக்கூடிய ஒரு பிரச்சனை. இது பிரசவத்தின் கடைசிக் கட்டத்தில் எப்போதாவது ஒரு சிலருக்கு நிகழக்கூடிய ஓர் அபூர்வ பிரச்சனை. கர்ப்பப்பை இவ்விதம் வெளியே வந்துவிட்டால் அது சாதாரணமாக இயற்கையாக **சுருங்குவது** போல சுருங்க முடியாது. அப்படி **கர்ப்பப்பை இயற்கையாக சுருங்கினால்தான் இரத்த போக்கு நிற்கும்** என் மனைவிக்கு அந்த நாட்களில் 15 வருட அனுபவம் இருந்தாலும் தன்னால் இயன்ற அளவு கர்ப்பப்பையை உள்ளே தள்ள முயற்சி செய்தும் அவர்களால் கர்ப்பப்பையை திரும்ப வயிற்றுக்குள் தள்ளிவிட முடியவில்லை. கர்ப்பப்பையிலிருந்து இரத்தம் தண்ணீர்போல் வெளியேறிக்கொண்டேயிருந்தது இதை சரி செய்ய எங்களுக்கு **சொற்ப நேரமேயிருந்தது** என்பது எங்களுக்குத் தெரியும். இப்போதுள்ள ஆபத்தை தவிர்க்க குறைந்தது **இரண்டு பாட்டில்** இரத்தமாவது உடனடியாக கொடுக்கப்படவேண்டும்.

ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் மருத்துவமனையில் ஊழியர்களே இரத்த தானம் செய்வது வழக்கம். இவ்விதம் அவர்கள் பலமுறை இரத்தம் கொடுத்ததுண்டு. எந்த நேரத்திலும் இரத்ததானம் செய்ய அவர்கள் தயங்கியதேயில்லை.

ஆனால் இந்த குறிப்பிட்ட தாயின் இரத்தபிரிவு **ஓ.நெகடிவ்** ஆகும். இப்பிரிவு இரத்தம் எங்கள் மருத்ததுவமனையின் ஊழியர்களில் ஒருவருக்கும் இல்லை. நான் உடனே கோயமுத்தூரில் உள்ள சில **இரத்த சேமிப்பு** நிலையங்களுக்கு அவசமாக போன் செய்தபோதும் **ஓ-நெகடிவ்** இரத்தம் எவரிடமும் இல்லை என்று கூறி தெரிவித்தனர். **நேரம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.**

**அந்த தாயின் உயிரை காப்பாற்ற வேண்டுமென்றால்** அறுவை சிகிச்சை மூலம் **கர்ப்பப்பையை** எடுப்பது தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது. அதுவும் அந்த ஆப்பரேசனை **ஒரு மணி நேரத்திற்குள்** செய்யாவிட்டால் இரத்தப் போக்கினால் அந்த தாய் உயிரிழக்க கூடும்.

எங்கள் மருத்துமனையில் ஆப்பரேஷன் சமயத்தில் மயக்கம் கொடுக்கும் மருத்துவர் (Anaesthetist) இல்லை. அப்படிப்பட்ட மருத்துவ நிபுணரை கோயமுத்தூரிலிருந்து அழைத்து வர **3 மணி நேரமாவது** ஆகும். கோயமுத்தூரில் உள்ள டாக்டர் ராஜேந்திரன் என்ற ஒரு மூத்த மகப்பேறு (Gaynaecologist) மருத்துவரை நான் அழைத்து எங்களது நிலைமையை விளக்கிக் கூறி அவர் தன்னோடு மயக்கம் கொடுக்கும் மருத்துவரையும் அழைத்துக்கொண்டு இங்கு வர

முடியுமா என்று கேட்டேன். அவர் எங்களுக்கு உதவுவதற்கு விருப்பம் இருந்தாலும். தனக்கு அந்த நள்ளிரவில் ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி அருகில் **யானைகள் நடமாடும் பகுதியில் காரை ஓட்டிக்கொண்டு வருவது** ஆபத்து என்றும் மேலும் அந்த நடு இராத்திரி நேரத்தில் ஒரு மயக்கம் கொடுக்கும் **மருத்துவரை** கண்டு பிடித்து அழைத்துவரவும் முடியாத நிலை என்றும் கூறினார். அவர் எங்களை உடனடியாக அந்த நோயாளியை கோயமுத்தூருக்கு அழைத்து வரும்படியாகக் கூறினார். இவ்வாறு அங்குசெல்ல (யானைகள கூட்டம் குறுக்கிடாவிட்டால்) 1 மணி நேரமாவது ஆகும்.

நேரத்தை ஆதாயப்படுத்த கோயமுத்தூரில் அந்த மருத்துவரின் இல்லத்திலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு போன்செய்து நாங்கள் ஆபத்தான நிலையிலுள்ள எங்கள் நோயாளியை கொண்டு வந்துவிடுகிறோம். நீங்களும் அந்த குறிப்பிட்ட மருத்துவமனைக்கு வந்துவிடுங்கள் என்று மிகவும் வருந்தி அவரைக் கேட்டுக்கொண்டேன். அவர் அதற்குச் சம்மதித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் கோயமுத்தூர் ஜே. எம். மருத்துவ மனையின் மகப்பேறு நிபுணரான (Gaynaecologist) டாக்டர் எலிசபெத் ஜார்ஜ் அவர்களை அழைத்து எங்கள் பிரச்சனையை விவரித்துக் கூறி அவர்களை அவர்களின் ஆபரேஷன் தியேட்டரை ஆயத்தமாக வைக்கவும் அவர்களுடைய மயக்க மருந்து **நிபுணரை** வரவழைக்கவும் சொன்னேன். டாக்டர் ராஜேந்திரன் அவர்கள் அங்கு வருவார் என்பதையம் கூறி நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த நோயாளிக்கு எப்படி உதவ முடியும் என்று பார்ப்போம் என்று கூறினேன். அந்த நல்ல மருத்துவர் எங்களுக்கு உதவ முன்வந்து இதற்குச் சம்மதித்தார். நான் உடனடியாக அந்த நோயாளியை ஆனைக்கட்டியிலிருந்து ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்ல ஆயத்தங்களைச் செய்தேன்.

நான் நோயாளியின் மாமியாருக்கு பிரசவித்த பெண்ணின் ஆபத்தான மரண நிலைமையை விளக்கிச் சொல்ல, அவர்கள் அழ ஆரம்பித்துவிட்டார்கள். என் மகன் குழந்தை ஆரேக்கியமாக இருக்கிறது என்று நீங்கள் சொன்னதால் அதை நம்பி இப்பொழுதுதான் 25 கி.மீட்டர் தொலைவிலிருக்கும் எங்கள் வீட்டிற்கு சென்றிருக்கிறான். இப்பொழுது பாதி விழியில்தான் இருப்பான் அவனோடு எந்த வழியிலும் தொடர்புகொள்ள முடியாது. (அப்பொழுது கைபேசி இல்லை) (Mobile Phone) இப்பொழுது அவளுக்கு இரத்தப்போக்கு இருக்கிறது என்றும் கோயமுத்தூரில் உள்ள இன்னொரு மருத்துவ மனைக்குச் சென்று **அறுவை சிகிச்சை** செய்து **கர்ப்பப்பையை** எடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறீர்கள் என் **மகனுடைய சம்மதமில்லாமல்** மருமகளை எந்த இடத்திற்கும் எடுத்துச்செல்ல நான் அனுமதிக்க மாட்டேன். ஆகவே யாரையாவது அனுப்பி என் மகனை இங்கு அழைத்து வாருங்கள். அதற்குபிறகு எதையும் தீர்மானிப்போம் என்று கூறினார்கள்.

மருமகளின் ஆபத்தான நிலைமையை புரியாத அந்த தாயின்முன் நான் ஸ்தம்பித்து நின்றேன். அவர்களது மகனை வரவழைக்க குறைந்தது 2 மணி நேரமாவது ஆகும். அப்படியே அவர் வந்தாலும் அவர் இங்கு வந்து சேருவதற்குள் மரித்த மனைவியைதான் காண நேரிடும் .

இனி இந்த கிராம வாசிகளின் சம்மதத்துக்காக காத்திருக்க முடியாது. ஒவ்வொரு நிமிஷமும் மரணத்தை நெருங்கிகொண்டிருக்கும் அந்த பெண்ணை முதலில் காப்பாற்றுவோம். என்ன வந்தாலும் சரி என்று நான் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அந்த தாயாரை ஒதுக்கி தள்ளிவிட்டு அந்த **நோயாளியையும்** முரண்டு பண்ணும் **மாமியாரையும்** அந்த ஆம்பலன்ஸில் ஏற்றிக்கொண்டு விரைந்தோம். செல்லுவதற்கு முன்பு அங்கு கூடியிருந்த மருத்துவமனை ஊழியர்களை ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்டேன்.

நாங்கள் கோயமுத்தூரில் உள்ள ஜே. எம். மருத்துவமனைக்கு அதிகாலை 1-20 மணிக்கு சென்றடைந்தோம். கர்த்தரின் கிரிபையால் நாங்கள் அங்கு சென்றபொழுது அந்த மூத்த மருத்தவர் அங்கு வந்திருந்தார். மயக்கம் கொடுக்கும் மருவத்துவரும் வந்து கொண்டிருப்பதாக கூறினார். அறுவை சிகிச்சை அறையும் அங்கு பணிபுரியும் செவிலியரும் ஒரு அவசர அறுவைச் சிகிச்சைக்கு தயாராயிரருந்தனர்.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக இரத்தம் போய் கொண்டிருந்ததால் அந்நோயாளி களைத்துப்போய் வெளுத்துக் காணப்பட்டாள். இரத்த பரிசோதனையில் அவளது இரத்தத்தின் அளவு (HB)4 கிராம் என்று தெரியவந்தது. (சரியான அளவு 12-14 கிராம இருக்கவேண்டும்) அவள் மருத்துவ மனையில் சேர்க்கப்படும்பொழுது அவளின் இரத்த அளவு 11 கிராமாக இருந்ததது. கடந்த 1 மணி நேரத்தில் இந்த அளவுக்கு இரத்தத்தை இழந்திருந்தாள். அவசர சிகிச்சைக்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கும்பொழுது மயக்கம் கொடுக்கும் மருத்துவர் வந்து சேர்ந்தார்.

ஆனால் அவர் நோயாளியைப் பார்த்த பின்னர் மயக்க மருந்துகொடுக்கும் முன் ஒரு பாட்டில் இரத்தமாவது அவளுக்கு செலுத்தப்படவேண்டும் என்று கூறினார். நான் **ஓ-நெகடிவ்** இரத்திற்காக கோயமுத்தூரில் எவ்வளவோ முயற்சி செய்தும் அது கிடைக்கவில்லை என்று அவரிடம் கூறியதை கேட்டுக்கொண்டிருந்த அதே ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் லேப் டெக்னிஷியன் கூறினார் இந்த மருத்துவமனையிலுள்ள ஒரு செவிலிய மாணவிக்கு **ஓ-நெகடிவ்** இரத்தம் இருப்பதாக பரவசத்துடன் கூறினார். அந்த மாணவி முந்தின தினம் ஒரு நோயாளிக்கு இரத்த தானம் செய்ய முன்வந்ததாகவும் ஆனால் அதற்குள் நோயாளியின் உறவினர்கள் அந்த இரத்தத்தை வேறு இடத்திலிருந்து கொண்டுவந்தபடியால் இம்மாணவி நேற்று அவள் இரத்தம் கொடுக்ககெண்டியிருகக்வில்லை என்றும் கூறினார். கர்த்தரின் வழிநடத்துதல் எத்தனை அற்புதம் பார்த்தீர்களா? கர்த்தரை ருசித்து பாருங்கள் என்பது இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ருசிக்கமுடிகிறது. ஸ்தோத்திரம்.

அம்மருத்துமனையின் டாக்டரிடம் அம்மாணவியை அழைத்து வந்து இரத்த தானம் செய்ய சொல்லும்படி அவரிடம் வருந்திக் கேட்டுக்கொண்டேன். அம் மாணவி அந்த ஆஸ்பத்திரி வளாகத்திலேயே தங்கியிருந்தபடியால் 5 நிமிடங்களுக்குள் அங்கு வந்துசேர்ந்தாள். லேப் டெக்னீஷியன் உடனடியாக அவளிடம் 1 பாட்டில் இரத்தம் எடுத்து தயாராக்கினாள். நாங்கள்

நோயாளிக்கு இரத்தத்தை செலுத்தும் பொழுது மயக்கம் கொடுக்கும் மருத்துவர் இன்னும் தயக்கத்துடனேயே இருந்தார். இந்த அறுவை சிகிச்சை செய்து முடிக்க குறைந்தது 1 மணி நேரமாவது ஆகும். ஆனால் அதை இந்த நோயாளி தாங்குவாரா என்பதுதான் சந்தேகம் என்றார்.

இந்த ஆபத்தான் ஆப்பரேஷனில் எதுவும் நடக்கலாம். ஆகவே இந்த நோயாளியின் **கணவராவது மாமியாராவது** இந்த ஆபத்தை அறிந்து இதற்கு **சம்மதித்தால்தான்** மகப்பேறு மருத்துவர் இந்த **அறுவை சிகிச்சையை** செய்வார். இதுதான் **மருத்துவ சட்டம்.** இவை எல்லாவற்றையுமே கவணித்துக்கொண்டிருந்த மாமியார் இப்பொழுது என் மகன் வீட்டிற்கு போய் சேர்ந்திருப்பான் என்றும் அவனோடு பேச முயற்சிக்கலாம் என்றும் கூறினார் . அது மட்டுமல்லாமல் இதுவரை தான் முயற்சித்தும் தன் மகனை தொடர்புக்கொள்ள முடியவில்லை என்றும் கூறினார். நாங்கள் இப்படி பேசிக்கொண்டிருக்கும்போது அந்த இடைவெளி நேரத்தில் அந்த (Gaynaecologist) மகப்பேறு **மருத்துவர்** எங்கள் யாரிடமும் சொல்லாமல் அமைதலாக நோயாளி பெண்ணின் **வெளியேயிருக்கும் அந்த கர்ப்பப்பையை உள்ளே தள்ள** முயற்சித்தார். **வாவ்** (Wow) என்று **உரத்த குரலில் சத்தமிட்ட** அவர் **Dr. முரளி இவளுக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை. கர்ப்பப்பை உள்ளே சென்றுவிட்டது. எத்தனை அற்புதம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

இரத்த போக்கும் இப்போது **கொஞ்ச நேரத்தில் நின்றுவிடும்** என்று அந்த டாக்டர் கூறினார். அவர் கூறியதை என்னால் நம்ப முடியவில்லை கர்த்தர் சரியான நேரத்தில் இடைப்பட்டு **ஓர் அற்புதத்தை** செய்ததற்காக அவரை துதிப்பதைத்த தவிர அந்த நேரத்தில் வேறு எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. டாக்டல் கூறியபடியே உடனடியாக **இரத்தப் போக்கும் நின்று விட்டது.** முன்பு எப்போதும் பழக்கம் இல்லாத கிறிஸ்தவரல்லாத ஒரு நோயாளி **மரணஆபத்திலிருந்து** பிழைத்து விட்டாள் என்று கர்த்தருடைய பிள்ளையகிய எங்களுக்கு எத்தனை சந்தோஷம்.

புதிய ஏற்பாட்டில் நான்குபேர் ஒரு நோயாளியை வீட்டின் கூரையை பிரித்து கட்டிலோடு வீட்டில்அமர்ந்திருக்கும் இயேசுவுக்கு முன் இறக்கினார்களே. அதைபோல நோயாளியின் விசுவாசத்தின்படியல்ல, ஆனைக்கட்டி பணியாளர்களுடன் அடியேனின் ஜெபத்தையும் விசுவாசத்தின் அடிப்படையிலும்தான் அன்று அந்த அற்புதம் இயேசு கிறிஸ்துவால் நடந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

நான் நேரத்தை பார்த்தபொழுது காலை 2 மணியை கடந்து விட்டிருந்தது. அச்சமயத்தில் அப்பெண்ணின் மாமியார் அழுதுக்கொண்டே எங்களிடத்தில் வந்து தன் மகனை தொடர்புகொள்ள முடியவில்லை என்று கூறினாள். நான் அவர்களிடம் உங்கள் மகன் வரவேண்டிய அவசியமீலலை. சிகிச்சை முடிந்துட்டது. உங்கள் மருமகள் நன்றாக இருக்கிறாள். பிழைத்துவிட்டாள். என்று கூறினேன்.

இரத்தபோக்கு நின்றபடியாலும் 1 பாட்டில் இரத்தம் கொடுக்கப்பட்டபடியாலும் நோயாளியின் நிலை தேறத் தொடங்கியது. அதிகாலைக்குள் கோயமுத்தூரில் உள்ள மற்றொரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு பாட்டில் இரத்தமும் கிடைத்து அதுவும் கொடுக்கப்பட்டது. காலை 7-00 மணிக்குள்ளதாக நோயாளி சுகம் அடைந்துவிட்டார்கள். திரும்பவும் அவளை எங்களது ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் மருத்துவமனைககே கொண்டுவந்துவிட்டோம்.

அப்பெண்ணின் கணவர் வழக்கம்போல தன் மனைவியை காண காலை 8-00 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார். தன் மனைவி அமர்ந்துகொண்டு பிறந்த தன் அழகான குழந்தையை அருகில் கிடத்திவிட்டு இட்லியை சாப்பிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார்.

இரவு நடந்த அந்த மரண போராட்டம் அவருக்கு தெரியாது. மனைவி தனக்கு நிகழ்ந்த காரியங்களை கணவனிடம் கூறியபொழுது அவரால் நம்ப முடியவில்லை. அவர் என்னிடம் வந்து சரியான நேரத்தில் செய்யப்பட்ட எல்லா உதவிகளுக்காகவும். தன் மனைவியை உயிரோடு காப்பாற்றிய முயற்சிக்கெல்லாம் தன் உளமார்ந்த நன்றியை தெரிவித்தார். நான் அவரிடம் இதற்கெல்லாம் காரணம் எல்லாவற்றையும் எங்களுக்காக அருமையாக செய்து முடித்துகொடுத்த **இயேசு கிறிஸ்துவுக்கே** எல்லா பாராட்டுகளும் உரியது ஆகும் என்று சொன்னது மட்டுமல்லாமல். உன்னுடைய **மனைவி கோயமுத்தூர் ஆபரேசன் தியேட்டரில் வைத்து சுகம் அடைந்தாள்** என்று தெரியும் வரை **தங்கள் முழங்காலில்** நின்று **ஜெபித்த** எங்கள் **ஆனைகட்டி டிரைபில் மிஷன் மருத்துமனையின் ஊழியர்கிளின் ஜெபத்திற்கு ஆண்டவர் அளித்த பதிலால்தான்** இன்று அவள் **சுகத்தோட இருக்கிறாள்** என்றும் கூறினேன்.

நள்ளிரவில் நடந்த இந்த சமபவம் முழுவதும் சுமார் 2 மணிநேரங்களே நடந்தது என்றாலும் ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி மருத்துவர்கள்.செவிலியர்கள், லேப் டெக்னிஷியன்கள் மற்றும் பொதனி மருத்துவ மனையின் **அனைத்து ஊழியர்களும் என்னையும் சேர்த்து** இந்த ஆபத்தான சிகிச்சையில் பங்குபெற **இராத்திரி முழுவதும்** விடிய விடிய ஜெபத்தோடு **விழிததிருக்க வேண்டியருந்தது.**

இப்படித்தான் ஆனைக்கட்டி பெத்தானி ஆஸ்பத்திரியில் வரும் ஆபத்தான ஒவ்வொரு நோயாளிகளுக்காகவும் ஆஸ்பத்திரியில் உள்ள நாங்கள் யாவரும் ஒரே குடும்பமாய் இணைந்து நோயாளி மரண கட்டத்தை தாண்டும் வரை நாங்கள் யாவரும் ஜெபத்தில் தரித்திருப்போம். அதனால்தான் ஆஸ்பத்திரியும், பணிசெய்பவர்களும், ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளும் ஆசீர்வதிக்கப்படுகின்றனர்.

**நம்மை காக்கும் தேவன் உறங்குவதுமில்லை தூங்கவதுமில்லை** (சங்கீதம் 121:4) நான் இச்சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் நம்முடைய **கிருபையுள்ள தேவன்** எப்படி வழிநடத்தி ஆஸ்பத்திரியில் ஒரு துக்ககரமான சம்பவமும் நடைபெறாமல் தடுத்தார் என்பதை எண்ணும்போது அது என்னைப் புல்லரிக்க வைக்கின்றது. **என் கிருபை** உனக்கு போதும் என்று தேவன் பவுலடியாருக்டகு கொடுத்த வாக்குத்தத்தம் எவ்வளவு உண்மையுள்ளது.

அந்த பெண் 2 நாட்கள் கழித்து மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டிற்கு சென்றாள். 3 வருடங்கள் கழித்து அவள் **அடுத்த பிரசவத்திற்கு** எங்கள் ஆனைகட்டி மருத்துவமனைக்கே திரும்பவும் வந்தாள். அவள் மறுபிறவி எடுத்து வந்தசவளைபோல் தோன்றினாள்.

## ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரி (பெத்தானி ஆஸ்பத்திரி)

மேலே வாதசித்ததை போல இப்படி ஏராளமான அற்புத சுகம் ஆனைக்கட்டி பெத்தானி ஆஸ்பத்திரியில் நடந்தது. அன்றைக்கு அந்த பெண் ஆப்பரேஷனுக்கு பணம் கொடுக்க முடியுமா? கோயமுத்தூர் பெரிய **தனியார் ஆஸ்பத்திரியில்** அன்று இராத்திரி அவசர ஆப்பரேஷக்கு வந்த **அத்தனை பெரிய டாக்டர்களின்** செலவுக்கு **யார் பணம் கொடுப்பார்கள்?** வாகன செலவு என்று ஏராளமான பண செலவுகள் செய்யப்பட்டதே இதற்கெல்லாம் அந்த ஆபத்தான கட்டத்தில 10 லட்சம் செலவாகும் அல்லது 5 லட்சம் செலவாகும் என்று அந்த மலைவாசி கிராம மக்களிடம் பேரம் பேச முடியுமா? உயிர் காப்பது மிக முக்கியம். இயேசுவின் அன்பு எங்களை ஏவினதால்தான் பெரிய பெரிய ஆபரேஷனை எல்லாம் வெற்றியோடு செய்ய முடிந்தது.

**இப்படிப்பட்ட சூழ்நிலையில்** உள்ளவர்கள்தான் ஆனைக்கட்டி டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள். அந்த நடு இரவு **யானைக்கு பயந்து** அந்த நோயாளியை அழைத்து செல்லாமல் இருந்திருந்தால் அந்த நோயாளி இறந்து போயிக்குமே ! அந்த ஏழை குடும்பத்தில் பிறந்த **முதல் குழந்தைக்கு** தாய் இல்லாமல் அந்த குழந்தை **அனாதை** ஆகியிருக்குமே ! இயேசு எல்லாரையும் மத வித்தியாசம் இல்லாமல் நேசிக்கிறார். எல்லா ஆத்துமாக்கலும் என்னுடையதே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த பிரசவத்துக்கு வந்த பெண் எந்த கவர்மெண்ட் ஆஸ்பத்திரியிலோ அல்லது கிறிஸ்தவர் அல்லாத தனியார் ஆஸ்பத்திரியிலோ சேர்க்கப்பட்டிருந்தால் இந்த ஜீவ மரண போராட்டத்தில் டாக்டரகள் செவிலியர்கள் அந்த பெண் எப்படியாவது பிழைக்க வைக்கவேண்டும் என்று அழுது ஜெபித்திருப்பார்களா? அந்த நடு ராத்திரி அந்த பெண்ணை தூக்கி ஆம்பூலன்ஸில் ஏற்றி யானைகள் குறிக்கிடக்கூடாது என்று ஜெபித்துக்கொண்டே தனியார் ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்றிருப்பார்களா? முதலில் இத்தனை லட்சம் கட்டினால்தான் ஆஸ்பத்திரியைவிட்டு மற்ற ஆஸ்பத்திரிக்கு போக அனுமதிப்பார்கள்.

அந்த பெண் சுகத்தோடு ஆனைக்கட்டி ஆஸ்பத்திரிக்கு திரும்பி வரும் வரை ஆனைக்கட்டி ஆஸ்பத்திரி ஊழியர்கள். வார்ட்பாய் முதல் டாக்டர்கள், செவிலியர்கள் அனைவரும் முட்டியில் நின்று அந்த பெண்ணுக்கு உயிரை திரும்ப தாரும் என்று விடிய விடிய அழுதிருப்பார்களா?

இதுதான் கிறிஸ்தவ அன்பு. இப்படிப்பட்ட ஆஸ்பத்திரிக்கும் மற்ற அரசாங்கம் அல்லது தனியார் ஆஸ்பத்திரிக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தீர்களா? இப்படிப்பட்ட ஜெபிக்கும் ஆஸ்பத்திரிதான் இப்படிப்பட்ட மலை காடுகளுக்குள் மிகவும் அவசியம்.

இப்படிப்பட்ட **ஏழை குடும்பங்கள்** நிறைந்த **அட்டப்பாடி, ஆனைக்கட்டி, காட்டு ஆதிவாசிகளுக்காகத்தான்** அந்த ஆஸ்பத்திரி நடத்தப்படுகிறது. அது **மூடப்படாமல் இயங்க**

**வேண்டும்** என்பதற்காகத்தான் Dr. **முரளிதர்** அவர்களும் **நாங்களும்** ஏழைகளுக்கு **இலவச மருத்துவம் கொடுக்கும்** நல்ல **கிறிஸ்தவ ஸ்தாபனத்தின்** பொறுப்பில் ஒப்படைக்க முயன்றுக்கொண்டிருக்கிறோம். பண வரவு இருந்தால்தான் செலவு செய்யமுடியும். இது மற்ற தொழில் ஸ்தாபனமாக இருந்தால் சுலபமாக விட்டுவிட்டு போகலாம். ஆனால் ஆஸ்பத்திரி ஊழியம் உயிர் காக்கும் ஊழியமாயிற்றே ! இதன் மூலம் இயேசுவை சுலபமாக அறிவிக்க முடியுமே !

**டாக்டர்களுக்கும்** செவிலியர்களுக்கும் மற்றுமுள்ள **மருத்துமனை ஊழியர்களுக்கும்** திருப்திகரமான **சம்பளம்** கொடுக்கும் நிலை **டிரைபல்** மிஷனுக்கு உண்டாகுமானால் எதற்காக நாங்கள் இந்த ஆஸ்பத்திரியை ஒப்படைக்க கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் உதவியை தேடி அலையவேண்டும்?

இதை வாசிக்கும் வாசகர்களும் குறிப்பாக **மலையாள பாஷை** பேசும் **ஜாமகாரன்** வாசகர்கள் குறிப்பாக வெளி நாடுகளில் குடியிருக்கும் அல்லது வேலைக்காக போயிருக்கும் **மலையாள குடும்பங்கள்** இவ்விவரங்களை உங்கள் **மனதின் பாரமாக** ஏற்று ஜெபித்து **டாக்டர் முரளிதர்** அவர்களை ஊக்கப்படுத்தி ஆஸ்பத்திரி தொடர்ந்து நடத்த முன்வரும் **கிறிஸ்தவ ஸ்தாபனங்கள்** உங்களுககு தெரிந்தால் டாக்டர் முரளிதர் அவர்களுக்கு அறிவியுங்கள். தொடர்ந்து ஜெபியுங்கள்

மேற்கொண்டு விவரம் அறியவும் தொடர்பு கொள்ளவும் :

**Dr. MURALIDHAR. M.D.,** (Medical Superindentent,)
Bethani Medical Centre, Anaikatti. P.O., Coimbatore Dt. Pin - 641108
Phone : 09443165080
email : muralidar.anaikatty@gmail.com tribalmission@ hotmail.com

# E-mail

ஜாமக்காரன் மாதம் வரவில்லை என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் பழைய விலாசத்தையும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட நம்பரையும், **தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கானவர்களின் விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழு விலாசத்தையும் மனதில் வைத்துக்கொள்ள முடியாது. உங்கள் புது விலாசத்தை தெளிவாக குறிப்பிடுங்கள். ஆகவே இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன். புது விலாசம் எழுதி அறிவித்த e-mailக்கு அல்லது கடிதத்துக்கு உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் புது விலாசத்தில் அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் தொலைபேசி எண்ணையும் மறக்காமல் குறிப்பிடுங்கள். காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில் உடனே அறிவிப்பேன்.

## *AN OPEN LETTER TO* Mr. MOTHI...

## *Congrats, **Mr. Modi.***

### *But, now will you please start working for the Nation ?*

**ஜாமக்காரன் :**

இதை தமிழில் மொழிபெயர்க்க நேரம் இல்லாமல் மிக அவசரமாக மலையாள பாஷையிலும், தமிழ் ஜாமக்காரனிலும் வெளியிட்டேன். யாராவது தமிழில் மொழிபெயர்த்து அனுப்பினால் ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் இதை வாசிக்க உதவியாக இருக்கும். எனக்கு மொழிபெயர்க்க சற்றும் நேரமில்லை.



So with Narendra Modi all set to rule the nation again for the next five years, what happens now? What will Christian do? Rather, what should Christians do?

The Bible is clear on the issue. Titus 3:1&2 say 'Remind them to be submissive to rulers and authorities, to be obedient, to be ready for every good work, to speak evil of no one, to avoid quarreling, to be gentle, and to show perfect courtesy toward all people.

**Romans 13:1 & 2** say 'Let every person be subject to the governing authorities. For there is no authority expect from God, and those that exist have been instituted by God. Therefore whoever resists the authorities resists what God has appointed and those who resists will incur judgment.'

**1 Peter 2:13 & 14** say: Be subject for the Lord's sake to every human institution, whether it be to the emperor as supreme, or to governors as sent by him to punish those who do evil and to praise those who do good.' Three verse down the line in the same chapter, Peter adds four classic phrases that reads like a code of conduct for us Christians in a nation's polity. And the code of conduct is this. 'Honor everyone. Love the brotherhood. Fear god. Honor the emperor.

Except when our faith is threatened or our rights compromised , we need not look beyond this code of conduct. It is from our rule book. And this is for our safe living.

One only hopes the Prime Minister will realize the enormous responsibility the nation has placed on him and start working for the welfare of the nation dropping his biases, petty politics and minority bashing. We are not looking for a perfect PM. only an earnest one ! One who is sincere, loyal to the people and who gives his best for the nation.

No government on earth has ever been perfect. No government yet to come till this side of eternit will be perfect either nor do they always follow God's laws and plans. The Narendra Modi government will be no exception. It will make its own mistakes.

It has made innumerable Himalayan blunders like the hastily conceived and poorly implemented demonetization, GST, besides heaping atrocities on the minorities through their tacit approval to lynchings in the name of cow protection etc.,

Modi has also become a laughing stock in the national and international media on many occasions with his comments ranging from the bizarre to the brainless on anything and everything under the sun from taking gas from the gutter to cloud cover from radar for fighter aircraft. I am sure he will come up with more such gaffes and his government will keep making more blunders. Nevertheless, the nation has elected him and his government and we need to respect the mandate.

Therefore, in as much as the government does not contradict God's Word as revealed to us in the Bible, we are to be peaceable with it. (Romans 12:18)

So. am I suggesting that we lie low and not reach when a church in Karnataka or Orrisa or Bihar is burned down or when belivers are paraded naked and beaten to death for not forsaking their faith in Jesus Christ? NO! Not at all! The law of the land is alive and kicking!

I thank God for institutions like the judiciary and the Election Commission, although the integrity of these institutions have come under scrutiny in the past five years. They give the common man hope that all's not lost in this nation. We need to raise our voice and resort to ways and means that are guaranteed to us in the Constitution. Freedom of faith is just one of them. There are several others as well

## *7 things Narendra Modi will do well remember !*

***Finally, Is there something God wants to tell the ruler of this nation? Yes, inneed . There are a few things I think God would want Modi to know. You can find them all in the Bible. I give below a few verses.***

1. God is Supreme & Sovereign

“The kings’s heart is a stream of water in the hand of the Lord; he turns it wherever he will” (Proverbs 21:1)

“ Blessed be th e name of God forever and ever, to whom belong wisdom and might. He changes times and seasons; he removes kings and sets up kings: he gives wisdom to the wise and knowledge to those who have understanding; he reveals deep and hidden things; he knows what is in the darkness, and the light dwells with him” (Daniel 2:20-22)

2. God loves you, too !

“For God so loved the world, that he gave his only Son, that whoever believes in him should not perish but have eternal life” (John 3:16)

“Behold, I stand at the door and knock .If anyone hears my voice and opens the door, I will come in to him and eat with him, and he with me”. (Revelation 3:20)

“For what will it profit a man if he gains the whole world, and loses his own soul? 37 Or what will a man give in exchange for his soul?” (Mark 8:36-37)

3. With authority comes accountability

To whom much is given, much be required (Luke 12;48)

“Jesus answered him, “You would have no authority over me at all unless it had been given you from above...” (John 19:11)

4. If you seek God, you can find HIM

“And you, Solomon my son, know the God of your father and serve him with a whole heart and with a willing mind, for the Lord searches all hearts and understands every plan and thought. If you seek him, he will be found by you, but if you forsake him, he will cast you off forever”. (1Chonicles 28:9)

5. Perhaps you have a divine mandate too (like King Cyrus had one)

Isaiah 45.

6. Treat Gods’sa children well

“For thus said the Lord of hosts, after his glory sent me to the nations who plundered you, for he who touches you touches the apple of his eye: “Behold, I will shake my hand over them, and they shall become plunder for those who served them. Then you will know that the Lord of hosts has sent me” (Zechariah 2:8&9)

7. Attempt to thwart God’s plans atyour own peril

‘Saul Saul, why are you persecuting me? It is hard for you to kick against the goals.’ (Acts26:14)

There is severe discipline for him who forsakes the way... (Proverbs 15:10)

It’s a tall order before Modi. I earnestly hope he lives up to it. He will be judged not by his oratory but by his actions. I hope they are good. To whom much is given, much will be required (Luke12:48) RS.

---

*This article is a slightly edited piece of another article which appeared in The Christian Messenger in June 2014 soon after Mr. Modi became Prime Minister fot the first time.*

**நாம் எதுவரையில்**
**தேறியிருக்கிறோமோ**
**அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு**
**ஒரே சிந்தையாயிருப்போமாக.** பிலி. 3:16

குறிப்பு : SMS அனுப்ப விரும்புபவர்கள் 9894261333 என்ற எண்ணில் SMS அனுப்பலாம்
இது ஆபீஸில் உள்ள மொபைல். ஆகவே இந்த மொபைலில் பேச முயற்சிக்க வேண்டும்.

**JULY - 2019**

# Printed Book (Periodical)


**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**


**Return Requested:**


**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**



Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.